Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 132 · சனிக்கிழமை Saturday · 14.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# ‘ஜல் ஜீவன்’ நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க பிரதமருக்கு மோடிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



சென்னை: தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்கவும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு (கட்டம்–3) ஒப்புதலையும், நிதியுதவியையும் வழங்கிட வேண்டுமென்றும் முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில், "தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான குடிநீர் வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. கிராமப் பகுதிகளிலுள்ள 1.25 கோடி வீடுகளில், 1.12 கோடி வீடுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் குழாய்கள் மூலம் இணைப்புகளை வழங்கி, ஜல் ஜீவன் திட்டத்தில் தமிழ்நாடு பெருத்த முன்னேற்றத்தைச் சாதித்துள்ளது. இதற்கிடையில் இந்த இயக்கத்தினை விரிவாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவினை வரவேற்கிறோம். ஜல் ஜீவன் மிஷன் இயக்கத்தின் முதல் கட்டத்தில், தமிழ்நாடு 45 புதிய பல கிராமங்களை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும், 56 பழைய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் மற்றும் 21,258 ஒற்றை கிராமத்திட்டங்களையும் மொத்தமாக 18,123 கோடி ரூபாய் செலவில் எடுத்துள்ளோம். அவற்றில் அனைத்து ஒற்றை கிராம குடிநீர்த் திட்டங்கள், பல கிராமங்களை அடக்கிய 101 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பழைய குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புத்திட்டங்களாக 92 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடைமுறையில் முன்னேற்றத்தில் உள்ளன. ஆனால், ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்கு என ரூபாய் 5,914 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது, மேலும் ரூபாய் 3,112 கோடி நிலுவையில் உள்ளது. 2024–25 ஆண்டுக்காக தமிழ்நாட்டிற்கு ரூபாய் 2,434 கோடி ஒதுக்கப்பட்ட போதிலும், ரூ.732 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. 2024 செப்டம்பர் முதல் எந்த நிதியையும் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு பெறவில்லை.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டங்களில் பணிகளின் முன்னேற்றத்தை நிலைநாட்டுவதற்கும், உரிய காலத்தில் இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கும் தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து 2,550 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.

நடைமுறையில் உள்ள ஜல் ஜீவன் மிஷன் திட்டங்களின் நிறைவேற்றத்தை உறுதி செய்திட ஏதுவாக நிலுவைத் தொகையான 3,112 கோடி ரூபாய் நிதியை உடனடியாக விடுவிக்க, தாமதமின்றி பிரதமர் தலையிட வேண்டும்.

மேலும் ஜப்பான் பன்னாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட ஒகேனக்கல் (கட்டம்–3) கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.8,428 கோடி செலவில் செயல்படுத்திட ஜல் சக்தி அமைச்சகத்தின் மாநிலத் திட்ட அனுமதி குழுவில் 15.06.2023 அன்று அனுமதிக்கப்பட்டது. அதில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்காக ரூ.2,283 கோடி அனுமதிக்கப்பட்டது.

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட உறுதியின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இத்திட்டத்தில் முன்னெடுப்புப் பணிகளை தொடங்கியது. ஆனால் ஒன்றிய குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புத் துறை, இத்திட்டத்தினை நீட்டிக்க அனுமதி பெறும் வரை, ஒன்றிய அரசின் உதவியை தற்போது வழங்க இயலாது எனக் குறிப்பிட்டுள்ளது, இந்த முக்கியமான திட்டத்திற்கு இந்தக் கட்டத்தில் ஒன்றிய அரசு தனது ஆதரவிலிருந்து பின்வாங்குவது என்பது, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்குவதை பாதிக்கும்.

# ஒரு தமிழனின் தலைமையில் இயங்குவதற்காகவே அதிமுகவை தேர்வு செய்தேன்; காளியம்மாள் பேட்டி



சென்னை: ஒரு தமிழனின் தலைமையில் இயங்க வேண்டும் என்பதற்காகவே அதிமுகவை தேர்வு செய்தேன் என காளியம்மாள் கூறினார்.

நாம் தமிழர் கட்சியின் மாநில மகளிர் பாசறை ஒருங்கிணைப்பாளராக பொறுப்பு வகித்து வந்த காளியம்மாள், கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு அந்த கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார். அதைத்தொடர்ந்து, அவர் எந்த கட்சியில் இணைவார் என்று காளியம்மாளின் ஆதரவாளர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். தவெகவுக்கு அவர் செல்லவிருப்பதாக தகவல்கள் வெளியாகி வந்தன. எனினும் தனது அரசியல் பயணம் குறித்து காளியம்மாள் எதுவும் தெரிவிக்காமல் அமைதிக்காத்து வந்தார்.

இந்நிலையில், சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் இல்லத்துக்கு இன்று காலை (மார்ச் 13) காளியம்மாள் வந்தார். பின்னர், எடப்பாடி பழனிசாமியை அவர் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி தன்னை அதிமுகவில் இணைத்துக் கொண்டார். இந்நிகழ்வின் போது அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன் உடனிருந்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த காளியம்மாள், "அரசியலில் இருந்து விலகி ஓராண்டு காலம் மக்கள் அரசியலில் இருந்தேன். கிட்டத்தட்ட ஓராண்டிற்கு பிறகு மீண்டும் அரசியல் பயணமாக தற்போது அதிமுகவில் இணைத்துள்ளேன். அதிமுகவை தேர்வு செய்ததற்கான காரணம், இந்த கட்சியை தலைமை ஏற்று வழிநடத்திக் கொண்டிருப்பவர் ஒரு சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர் என்பது தான்.

சாமானிய குடும்பத்தில் இருந்து வந்து, கட்சிதலைமையை எட்ட முடியும் என்ற ஜனநாயக சூழல் அதிமுகவில் இருக்கிறது. அதுமட்டுமின்றி, ஒரு தமிழனின் தலைமையின் கீழ் இயங்குவதற்கு மன உறுதியுடன் நான் இருந்ததாலுமே அதிமுகவைத் தேர்வு செய்தேன்.

நாம் தமிழர் கட்சியில் இருந்து வெளியேறிய பின்பு, அரசியலுக்கு நான் செல்லவில்லை என்றால் உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கும், என் இன மக்களுக்குமான அரசியல் பங்கேற்பை எப்படி உறுதிச் செய்வது என்ற கேள்வி எழுந்தது. அதிமுகவில் இணைவது என்பது காளியம்மாள் தனித்து எடுத்த முடிவு இல்லை. அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவு தான்" என்றார்.

தொடர்ந்து, தூத்துக்குடி மாணவி கொலை சம்பவம் குறித்து செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளித்த காளியம்மாள், "பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனைகள் கடுமையாக்கப்படாத வரைக்கும் இது ஒரு சாபக்கேடு தான். மீண்டும் அந்த தவறை செய்வதற்கு பயம் வரும் வகையில், தண்டனை கடுமையாக்கப்பட வேண்டும்.

நான் மரண தண்டனைக்கு எதிரானவள் தான். ஆனால், சிறுமிகளை சீரழிப்பவர்களுக்கு மரண தண்டனை அளிப்பதில் தவறே இல்லை. தண்டனைகள் கடுமையாக்கப்பட்டால் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும் என்று நினைக்கிறேன்" என்று தெரிவித்தார்.

நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியின் செயல்பாடுகள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த காளியம்மாள், "நான் சொல்வதை விட தேர்தலில் மக்கள் சொல்வார்கள்" என்றார்.

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான காளியம்மாள், கடந்த 2019–ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடசென்னை தொகுதியிலும், 2021–ஆம் ஆண்டு பூம்புகார் சட்டமன்றத் தொகுதியிலும், 2024– ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மயிலாடுதுறை தொகுதியிலும் நாம் தமிழர் கட்சியின் சார்பில் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்சியின் பெயர் அபுமமுக, சின்னம் தென்னந்தோப்பு சசிகலா அறிவிப்பு




சென்னை:

அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டதாகவும், வரும் சட்டமன்றத் தேர்தலில் தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிட உள்ளதாகவும் வி.கே. சசிகலா அறிவித்தார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி வி.கே. சசிகலா கடந்த பிப்ரவரி மாதம் புதிதாக கட்சி தொடங்குவதாக அறிவித்து அதற்கான கொடியை அறிமுகப்படுத்தினார். விரைவில் கட்சியின் பெயர் அறிவிக்கப்படும் என்று அவர் கூறியிருந்த நிலையில், சென்னை போயஸ் கார்டனில் உள்ள இல்லத்தில் புதிய கட்சியின் பெயரையும், சின்னத்தையும் அவர் வெளியிட்டார்.

செய்தியாளர்களை சந்தித்த சசிகலா, "திமுக என்ற தீய சக்தியை வேரறுத்து தமிழக மக்களை காப்பாற்றுவதற்காக புரட்சித் தலைவர் ஒரு இயக்கத்தை தொடங்கினார். அந்த கட்சியானது ஏழைகளுக்காகவே உருவாக்கப்பட்டது.

மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதை ஆட்சியில் அவர் செய்து காட்டினார். அவரைப் போலவே மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவும், எம்ஜிஆர் கொள்கையில் அடி பிறழாமல் மக்களுக்கு வேண்டிய நல்ல திட்டங்களையெல்லாம் கொடுத்தார். குறிப்பாக, அவருடைய ஆட்சி காலத்தில் பெண்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்துக்காக நிறைய திட்டங்களை உருவாக்கினார். அவருடைய மறைவுக்கு பிறகு எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. தமிழ்நாட்டு மக்களை திமுக என்ற தீய சக்தி கசக்கி பிழிந்து விட்டது. இதையெல்லாம் பார்த்து இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்த நாளான பிப்ரவரி 24 ஆம் தேதி கட்சியின் கொடியை அறிமுகப்படுத்தினேன். எம்ஜிஆர், ஜெயலலிதா மீது பற்றுள்ள ஒரு தொண்டர் ஒரு கட்சியை ஆரம்பித்துள்ளார். அவர் ஆரம்பித்த கட்சியில் நான் என்னை இணைத்துக் கொள்கிறேன். அந்த கட்சிக்கு 'அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த சட்டமன்ற தேர்தலில் தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிட உள்ளோம்" என்றார். பின்னர் கண் கலங்கியவாறே, மக்களோடு இருப்பேன் என்பதற்கு இந்த சின்னமே ஒரு சாட்சி என்று கூறினார். வரும் சட்டமன்ற தேர்தலில் அபுமமுக கட்சி சார்பில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தென்னந்தோப்பு சின்னத்தில் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று கூறிய சசிகலாவிடம், தனித்து போட்டியிடுவீர்களா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு, "தனி மரம் தோப்பாகாது என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் நாங்கள் தனி மரமாக வரவில்லை. தோப்பாக தான் வந்துள்ளோம். தலைவர் காலத்திலிருந்தே எங்களுடன் வந்தவர்களுக்கு பாதுகாப்பாக நாங்கள் இருப்போம்" என்று பதிலளித்தார். அமமுக என கட்சி தொடங்கிய டி.டி.வி. தினகரன் இப்போது அதிமுகவுடன் கூட்டணியில் இருப்பது குறித்து கேட்டதற்கு, "ஒரு கட்சி அதன் விருப்பத்திற்கேற்ப செயல்படும். என்னை பொருத்தவரை எல்லாமே மக்கள் தான். தமிழக மக்கள் நல்ல மனம் படைத்தவர்கள். அதனால் நல்ல தீர்ப்பை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது" என்றார்.

தொடர்ந்து பேசிய சசிகலா, "திமுக ஆட்சியில் 5 வயது குழந்தை முதல் மூதாட்டி வரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். பகலிலேயே சாலையில் வெட்டுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் மக்கள், 'ஜெயலலிதா ஆட்சி போல வராது' என்கின்றனர். திமுகவை ஓட ஓட விரட்டுவது தான் எங்கள் வேலை" என தெரிவித்தார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்
14.03.2026




சங்கராபுரம் அருகே காட்டுவன்னஞ்சுர் பகுதியில் வசிக்கும் கிராமமக்கள் அனைத்து சமுதாய மக்களுக்கும் வீட்டு மனை பட்டா வழங்ககோரி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பாய் தலகாணி மற்றும் சமைக்கும் பாத்திரத்துடன் திமுக துண்டை அணிந்து நூதன முறையில் போராட்டம் நடத்தினர்

# நல்லூர் மணிமுத்தாற்றில் ரூ.48 லட்சத்தில் படித்துறை: எம்.எல்.ஏ. தலைமையில் பூமி பூஜை



கடலூர் மாவட்டம் நல்லூர் ஸ்ரீ வில்வனேஸ்வரர் கோயில் மணிமுத்தாற்றில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளருமான சி.வெ. கணேசன் அவர்களின் பரிந்துரையின் பேரில் பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று ரூ.48 லட்சம் மதிப்பீட்டில் படித்துறை அமைப்பதற்கான பூமி பூஜை இன்று விருத்தாச்சலம் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

பொதுப்பணித்துறை விருதாச்சலம் கோட்டை செயற்பொறியாளர் பாலமுருகன், உதவி செயற்பொறியாளர் பிரசன்னா, வேப்பூர் உதவி பொறியாளர் சுதர்சன், ஊராட்சி செயலாளர் திருநீலமணிகண்டன் மற்றும் திமுக நிர்வாகிகள் நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தனசேகர், நல்லூர் கிளைச் செயலாளர் சுப்பு அன்பழகன், கடலூர் மேற்கு மாவட்ட ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் இலங்கியனூர் ராஜா, பிரதிநிதிஎஸ்.ஆர்.மணிகண்டன், காங்கிரஸ் மேற்கு வட்டாரத் தலைவர் செல்வா ஆனந்த், காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டதுடன், தங்களின் பல ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றித் தந்த அமைச்சர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினருக்கு நெஞ்சார்ந்த நன்றியினையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

# தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் ட்ரோனாதான் நிகழ்ச்சி






தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் அமைந்துள்ள சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் மின்னணு மற்றும் தொடர்பியல் துறை சார்பில் ட்ரோனாதான் 2K26 என்ற தொழில்நுட்ப நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் வைத்து நடைபெற்றது.

கல்லூரியின் தலைவர் பொறியாளர் ஜேசஸ் ராஜா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.நிகழ்ச்சியின் தொடக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கியது. இந்நிகழ்விற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் தலைமைவகித்தார்.கல்லூரியின் நிர்வாகஇயக்குனர் பேராசிரியர் கனக பாண்டியன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரையும் மின்னணு மற்றும் தொடர்பியல் துறையில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி ரம்யா வரவேற்றார்.தொடர்ந்து நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற அனைவருக்கும் கல்லூரியின் முதல்வர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆகியோர் இணைந்து பொன்னாடை அணிவித்தும் நினைவு பரிசு வழங்கியும் கௌரவித்தனர்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக எட்டோ டோ டெக்னோவேஷன்ஸ் நிறுவனத்தின் முதன்மை பொறியாளரும் தலைமை செயல் அதிகாரியுமான முகமது நவ்ஷத் ட்ரோன் விமானி மற்றும் பொறியாளரான சபரிநாத் சக்திவேல் மற்றும் ரபேல் கிரியேட்டிவ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான காருண்யா குணவதி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக மாணவர்கள் தொழில்நுட்பத் திறன் புதுமையான சிந்தனை மற்றும் படைப்பாற்றலை வெளிக்கொண்டு வரும் வகையில் ட்ரோன் பந்தயம், ஆய்வு கட்டுரை, ட்ரோன் செயல்பாட்டுத் மற்றும் வான்வழி கண்காணிப்பு போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களின் திறமையை வெளிப்படுத்தினர். குறிப்பாக இந்நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த மார்எப்ரம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியை சேர்ந்த ஜோஸ்வாஜெயம்,ஆஸ்டின் ஜெனித் ராஜ், ஆகியோர் முதல் பரிசினை பெற்றனர் பரிசு தொகையாகரூபாய்.20000 வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் விழாவின் நிறைவில் மின்னணு மற்றும் தொடர்பியல் துறையில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி மகேஷ்குமாரி நன்றி கூறினார். நிகழ்ச்சி நிறைவில் தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி இனிதேநிறைவு பெற்றது.




தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 20252026 ஆம் ஆண்டின் பண்ணை சாரா திட்டத்தின் கீழ் தமிழக அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை காரைக்குடியில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி கா. பொற்கொடி அவர்களின் உத்தரவின் படி பௌர்ணமி மகளிர் சுய உதவிக் குழு சிறுதானிய உணவகம் திறந்து வைக்கப்பட்டது. விழாவில் திட்ட இயக்குனர் திருமதி கவிதா பிரியா, அரசு தலைமை மருத்துவர் திரு.அருள்தாஸ் மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் உதவித்திட்ட அலுவலர், வட்டார மேலாளர் வட்டார ஒருங்கிணைப்பாளர், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கோடைகால கோ கிளாம் சிறப்பு விற்பனை கண்காட்சி சுகுணா மண்டபத்தில் நடைபெறும்

## இக்கண்காட்சியில் சிறப்பு தள்ளுபடி விற்பனை நடைபெறும்



கோவை, மற்றும் அதன் சுற்றுப்புற, பகுதிகளில் உள்ள ஷாப்பிங் செய்யும் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பை பெற்ற 'கோ கிளாம்' ஷாப்பிங் கண்காட்சி பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வெவ்வேறு பண்டிகை மற்றும் பல்வேறு சீசன்களில் தமது விற்பனை கண்காட்சியை நடத்தி வருகிறது.

இந்நிலையில் கோடை கால விற்பனை கண்காட்சியாக கோவை அவினாசி சாலையில் உள்ள சுகுணா மண்டப அரங்கில் கோ கிளாம் தமது சிறப்பு விற்பனை கண்காட்சியை துவங்கியது.

மார்ச் 13,14,15ந்தேதி என மூன்று நாட்கள் நடைபெற உள்ள இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள், பரிசு பொருட்கள்,வீட்டு அலங்கார பொருட்கள் என நூறுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கோடை காலத்திற்கு ஏற்றபெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு விதமான ஆடைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னதாக,

கோ க்ளாம் கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் ஹீனா மற்றும் ராகுல் தலைமையில் நடைபெற்ற கண்காட்சி துவக்க விழாவில்,சிறப்பு விருந்தினர்களாக,மருத்துவர் ஜனனி, ஆலம் விழுதுகள் அறக்கட்டளை தலைவர் மீனா ஜெயக்குமார்,ஸ்ரீலதா,திருப்பூர் நேஹா,டாக்டர் பிரதுளா,திவ்யா செஷயர் ஹோம்ஸ்,சந்தியா ராம்குமார்,டாக்டர் லட்சுமி,ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தனர். கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்களான ஹீனா மற்றும் ராகுல் ஆகியோர் ஷாப்பிங் கண்காட்சி குறித்து பேசுகையில், இந்த ஆண்டு கோடை கால

சிறப்பு விற்பனை கண்காட்சியாகதுவங்கப்பட்டுள்ளதாகவும்,ஷாப்பிங் செய்ய வருபவர்களுக்கு தேவையான சிறப்பு தள்ளுபடியுடன் அனைத்து பொருட்களுக்கான அரங்குகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும்,

குறிப்பாக கண்காட்சியில், பெண்களுக்கான லேட்டஸ்ட் மாடல் ஆடைகள், கொல்கத்தா,லூதியானா, குஜராத், டில்லி,ஜெய்ப்பூர்,புனே என இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பிரத்யேகமாக விற்பனை செய்யபடுவதாக தெரிவித்தனர்.

மேலும் கண்காட்சியில் ஆடை, ஆபரணங்கள்,,குழந்தைகளுக்கான கைவினை பொருட்கள், பிரபல கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஹேண்ட் பேக்குகள்,பிரத்யேக டிசைனில் உருவாக்கப்பட்ட காலணிகள் பெண்களுக்கான, ஜிமிக்கி கம்மல், வளையல்,வெள்ளி அணிகலன்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக பெண்கள் பயன்படுத்தும் இயற்கை முறையிலான அழகுக்கலை பொருட்கள், சிகை அலங்கார பொருட்கள், முக அலங்கார பொருட்கள், வாசனை திரவியங்கள் போன்றவற்றிற்கு தனி தனி அரங்குகள் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்..

ஒவ்வொரு சீசனிலும் கோ கிளாம் விற்பனை கண்காட்சியில் கோவை,திருப்பூர்,

ஈரோடு,நாமக்கல்,உதகை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாடிக்கையாளர்கள் வந்து பொருட்களை ஆர்வமுடன் வாங்கி செல்வதாக தெரிவித்தனர்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# ராணுவப்படையினர் மற்றும் போலீசாரின் கொடி அணிவகுப்பு ஊர்வலம்



கன்னியாகுமரி மாவட்டம்.தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணையம் பல்வேறு முன்னேற்பாடு பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. இதன் ஒரு பகுதியாக, பொதுமக்களிடையே பாதுகாப்பு குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தவும்,அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யவும் ராணுவப் படையினர் மற்றும் போலீசாரின் கொடி அணிவகுப்பு ஊர்வலம் நடத்த உத்தரவிட்டுள்ளது.

அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சத்தீஸ்கர் மாநிலத்தில் இருந்து 86 பட்டாலியன் சேர்ந்த இந்திய எல்லை பாதுகாப்பு படையினர் (BSF) 90 பேர் வருகை தந்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் உத்தரவு படி, மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர். நல்லசிவம், உதவி காவல் கண்காணிப்பாளர் (பயிற்சி). அங்கிதா மேற்பார்வையில் எல்லை பாதுகாப்பு படை உதவி தளவாய் ரஜினீஸ் கட்சாப், ஆய்வாளர் அஜய் சிங்,காவல் ஆய்வாளர்கள். காந்திமதி,வேலம்மாள், துப்பாக்கிஏந்தியஎல்லை பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் போலீசார்கள் ஆகியோர் சேர்ந்து மார்த்தாண்டம் புதிய பேருந்து நிலையம் முன்பு தொடங்கி குழித்துறை பேருந்து நிலையம் வரை கொடி அணிவகுப்பு ஊர்வலமாக சென்றனர்.

## எரிவாயு உருளை விற்பனை முகவர்களுடன்

# எரிவாயு உருளை விநியோகம் தொடர்பாக ஆய்வுக்கூட்டம்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

செய்திக்குறிப்பு - ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் 11.03.2026 அன்று மாலை 4 மணியளவில் எண்ணெய் வணிக நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் எரிவாயு உருளை விற்பனை முகவர்களுடன் எரிவாயு உருளை விநியோகம் தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் எண்ணெய் வணிக நிறுவனங்களில் வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் எரிவாயு உருளைகள் தற்போதுள்ள வழக்கமான நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து வீடுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என உறுதியளித்துள்ளனர். எனவே பொதுமக்கள் வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு உருளைகளை பெறுவதற்காக அச்சத்துடன் தொடர்ந்து இணைய வழியில் முன்பதிவு செய்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், எரிவாயு உருளை விநியோக முகவர்கள் வழக்கமான நாட்கள் இடைவெளியில் முதுநிலைப்படி வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு உருளைகள் விநியோகித்து வருவதால் பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லைஎனஈரோடுமாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.



தென்காசி மாவட்டம் சுரண்டையை அடுத்த குலையநேரி கிராமம் வழக்கறிஞர் அ.கணேசன் B.A.B.L, அவர்கள் மத்திய அரசு நோட்டரி பப்ளிக் வழக்கறிஞராக தேர்வு செய்யப்பட்டார். அவரை வழக்கறிஞர்கள்,பத்திர எழுத்தர்கள்,சமூக ஆர்வலர்கள் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.குலையநேரி கிராமத்தின் முதல் அரசு நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தூத்துக்குடியில் வி.வி.டி. சிக்னல் அருகில்

# தூத்துக்குடி மாவட்ட தேர்தல் கண்காணிப்பாளர் லயன்ஸ் ஜெ.கே.ஆர்.தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்



த.வெ.க. கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த்தனதுஎக்ஸ்தளத்தில்,"விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வுக்கான(Caste-survey) அரசாணையை உடனடியாக வெளியிடக் கோருகிறோம்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டையும் தமிழகம் எங்கும் பரவலாகி வரும் போதைப் பொருட்களையும் தடுக்கத் தவறியதமிழகஅரசைக்கண்டித்தும்.தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில், தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடியில் நேற்று தமிழக வெற்றி கழகம் சார்பில் தமிழகத்தில் நிலவி வரும் சட்டம் ஒழுங்கு சீர்கேடை கண்டித்தும்,கட்சி தலைவர் நடிகர் விஜயின் பிரசாரத்திற்கு வழிகாட்டும் நெறிமுறைகள் என்ற பெயரில் கட்டுப்பாடு விதிப்பதை கண்டித்தும், தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தூத்துக்குடி தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டத்தில்500-க்கும்மேற்பட்டதமிழக வெற்றிக் கழகத்தினர் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராக வங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலதுணைப் பொதுச்செயலாளர் சுபத்ரா முருகன், மாவட்ட செயலாளர்கள் எஸ்.டி. ஆர். சாமுவேல்ராஜ், பாலசுப்ரமணியன், பிரைட்டர், மதன், கிஷோர் மற்றும் கழக நிர்வாகிகளும் தோழர்கள் கலந்து கொண்டனர்.




மேட்டூரில் செயல்படும் தீயணைப்பு நிலையத்திற்கு, மேட்டூர் கெம்பிளாஸ்ட் நிறுவனம் சார்பில் ரூ. 2 லட்சம் மதிப்பிலான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய மாவட்டஉதவி அலுவலர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மேட்டூர் தீயணைப்பு நிலைய அலுவலர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். கெம்பிளாஸ்ட் சன்மார் நிறுவனத்தின் தலைவர் பழனிச்சாமி மற்றும் துணைத் தலைவர் ஸ்ரீ ராம்குமார் ஆகியோர் உபகரணங்களை வழங்கினர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை கெம்பிளாஸ்ட் நிறுவனத்தின் மக்கள் தொடர்பு அலுவலர்கள் விவேகானந்தன் மற்றும் சாலமன் ஆகியோர் செய்திருந்தனர்.






தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரம் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் நடப்போம் நலம் பெறுவோம் என்ற தலைப்பில் 8 கி.மீ நடைபயிற்சியினை ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் கால்நடை மருத்துவமனை முகப்பு பகுதியில் இருந்து துவங்கபட்டது இந்த நிகழ்வினை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி கொடியசைத்து துவக்கி வைத்து நடைப்பயிற்சியை மேற்கொண்டார். இந்த நடைப்பயிற்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, வட்டார மருத்துவ அலுவலர் மரு.செந்தில்குமார், நகராட்சி தலைவர் என். ஆர். நாகராஜ், ஆணையாளர் மங்கையர்கரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நடைப்பயிற்சியானது அமலா பள்ளி, நேஹா மருத்துவ மனை, நகராட்சி பூங்கா வழியாக சென்று மீண்டும் அதே வழியில் திரும்ப மீண்டும் கால்நடை மருத்துவ மனையை வந்தடைந்தனர். இதில் 700 மேற்பட்ட செவிலியர் கல்லூரி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.03.2026) ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் ரங்கசமுத்திரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வழங்க சமைக்கப்பட்டு வரும் மதிய உணவினை ஆய்வு மேற்கொண்டார்.







கன்னியாகுமரி மாவட்டம்: அஞ்சுகிராமத்தில் புதிய ஆக்சிஸ் பேங்க் திறப்பு விழாவிற்கு திமுக மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் டாக்டர் பி.டி. செல்வகுமார் அவர்கள் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்நிலையில் கண்ணன், ரமேஷ், ,ரவிசங்கர், அஞ்சுகிராமம் வர்த்தக சங்கத்தலைவர் வசீம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# சத்தியமங்கலம் முதல் குள்ளங்கரடு வரையில் வழி நீட்டிப்பு செய்த வழித்தடத்திற்கான பேருந்து சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் பகுதியில் நேற்று (13.03.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சத்தியமங்கலம் முதல் குள்ளங்கரடு வரையில் வழி நீட்டிப்பு செய்த வழித்தடத்திற்கான பேருந்து சேவையினை கொடியசைத்து துவக்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நேற்றையதினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சத்தியமங்கலம் குள்ளங்கரடு குடியிருப்பு பகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில், சத்தியமங்கலம் முதல் குள்ளங்கரடு வரையில் வழி நீட்டிப்பு செய்த வழித்தடத்திற்கான பேருந்து சேவையினை கொடியசைத்து துவக்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இப்பேருந்தானது, சத்தியமங்கலத்திலிருந்து, வடக்கு பேட்டை, புளியங்கோம்பை, குள்ளங்கரடு வீட்டு வசதி வாரியம், ஜான்பிரட் ஆப் பள்ளி வழியாக சென்று மீண்டும் சத்தியமங்கலம் வந்தடையும். இப்பகுதியில் 450 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். 1200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இப்பேருந்து வசதியின் மூலமாக பயன்பெறுவார்கள்.



இந்த நிகழ்ச்சியின் போது, சத்தியமங்கலம் நகர் மன்ற தலைவர் ஜானகி ராமசாமி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் செல்வகுமார், நகராட்சி ஆணையாளர் திரு.வெங்கடேஸ்வரன், சத்தியமங்கலம் வட்டாட்சியர் ஜமுனா ராணி, துணை மேலாளர் வணிகம் ராஜேந்திரன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஈரோடு பவானிசாகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கலெக்டர் ச.கந்தசாமி

# அதிக எண்ணிக்கையில் உள்ள வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நேற்று (13.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அதிக எண்ணிக்கையில் உள்ள வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் 2026 ஐ முன்னிட்டு நேற்றைய தினம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சத்தியமங்கலம், காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கப்படும் மையங்களையும், மற்றும் தபால் வாக்கு (Postal Ballot) நடைபெறும் இடங்களையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, சத்தியமங்கலம் ரங்கசமுத்திரம், நகராட்சி உயர்நிலைப்பள்ளியில், வாக்குச்சாவடி மையங்களையும் பார்வையிட்டு, குடிநீர் வசதி, மின்சாரம் மற்றும், கழிப்பறை வசதி (ஆண்/பெண் தனித்தனி), மாற்றுத்திறனாளிகள் செல்லும் வகையில் ரேம்ப் (Ramp) வசதி உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், பயிற்சி பெறும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்கு செலுத்துவதற்காக அமைக்கப்படவுள்ள இடத்தினை பார்வையிட்டார்.

மேலும், சத்தியமங்கலம் ரங்கசமுத்திரம், நகராட்சி உயர்நிலைப்பள்ளியில், பயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை, மாணவ, மாணவியர்களுக்கு மதிய உணவு தயாரிக்கும் உணவு பட்டியல் விபரம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம், மாணவியர்கள் வகுப்பறை, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை







தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் மாணவ மாணவியர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்து அவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வின் போது சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் வெங்கடேஸ்வரன், சத்தியமங்கலம் வட்டாட்சியர் ஜமுனாராணி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன்

# சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உப்பிலிபாளையம் விளையாட்டு திடலில் உள்விளையாட்டு இறகு பந்து மைதானம் அமைக்கும் பணியினையும் மற்றும் 114 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைபட்டாக்களை வழங்கினார்

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் (12.03.2026) அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் முருங்கத்தொழுவு ஊராட்சி, உப்பிலிபாளையம் விளையாட்டு திடலில் உள் விளையாட்டு இறகு பந்து மைதானம் அமைக்கும் பணியினையும் மற்றும் 114 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், அன்புக்கரங்கள் திட்டம், கட்டணமில்லா பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, வங்கிகடன் தள்ளுபடி, விவசாய கடன் தள்ளுபடி, வரும்முன் காப்போம், நம்மைக் காக்கும் 48, மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் என பல்வேறு திட்டங்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பேரிடர் அந்த வகையில் இன்றைய தினம், வருவாய் மற்றும்



மேலாண்மைத்துறையின் சார்பில், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளான முகாசிபிடாரியூர், முருங்கத்தொழுவு, எக்கட்டாம்பாளையம், பசுவபட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த 114 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைபட்டாக்களை வழங்கினார்.

முன்னதாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முருங்கத்தொழுவு ஊராட்சி, உப்பிலிபாளையம் பகுதியில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில், விளையாட்டு திடலில் உள் விளையாட்டு இறகு பந்து மைதானம் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, பெருந்துறை வட்டாட்சியர் சரவணன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# கோவையில் குட்கா போதைப்பொருட்களை பதுக்கி வைத்து விற்றவர் கைது

கோவையில் குட்கா போதைப் பொருட்களை பதுக்கி வைத்து கடைகளுக்கு விற்பனை செய்துவந்த அஸ்வின்குமார் என்பவனை கவுண்டம்பாளையம் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவனிடம் இருந்து விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த 200 கிலோ குட்கா போதைப் பொருட்களை பறிமுதல் செய்தனர்.

கவுண்டம்பாளையம் ஆய்வாளர் வெற்றிச்செல்விக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் சாய்பாபா காலனி வேலாண்டிபாளையத்தை சேர்ந்த அஸ்வின் குமார் 34 என்பவர் கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள சில கடைகளுக்கு புகையிலைப் பொருட்கள் சப்ளை செய்ய வைத்திருப்பதாக கிடைத்தா தகவலை கொண்டு அஸ்வின் குமார் ஐ பிடித்து விசாரணை செய்தனர்.

இதில் தடாகம் சோமையனூரில் தனியாக வாடகைக்கு வீடு எடுத்து அதில் 200 கிலோ பெருமான புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைத்து கடைகளுக்கு விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

இதையடுத்து அஸ்வின்குமார் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர். மேலும் அவரிடம் இருந்து 200 கிலோ குட்கா போதைப் பொருட்களையும் பறிமுதல் செய்தனர்.





ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் வீரமணி ஜெயக்குமார் திமுக மாநில மாணவரணித் துணைச் செயலாளராக இருந்த நிலையில் தற்போது மாணவரணிச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இதற்கான நியமன ஆணையை அக்கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ளார். இந்தப் பொறுப்பை ஏற்கும் முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ள அவருக்கு, திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# காரைவாய்க்கால் பகுதியில் உள்ள காலிங்கராயன் வாய்க்கால் மைல் 13/7 ல் உள்ள தொட்டிபாலம் சீரமைப்பு பணிகள் குறித்து அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு மேற்கொண்டார்

தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி (12.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், காரைவாய்க்கால் பகுதியில் உள்ள காலிங்கராயன் வாய்க்கால் மைல் 13/7 ல் உள்ள தொட்டி பாலம் சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பெரும்பள்ளம் ஓடையின் மேல் பாயும் பாலம் 750 ஆண்டுகள் பழமையானது. பாரம்பரிய கொண்ட புராதான தொட்டி நீர் வழி பாலம். காலிங்கராயன் பாலம் என்பது தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பாலம். பவானி, நொய்யல், நதிகளை இணைக்கும் தொட்டிபாலம். இப்பாலம் விவசாயிகளின் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது. தமிழ்நாட்டின் முதல் நீர்வழி பாலம் என்று போற்றப்படுகிறது. இப்பாலம் 8 நூற்றாண்டுகளாக தமிழ்நாட்டில் செயல்பாட்டில் இருக்கும் ஒரே நீர்வழிப்பாலம் இதுவாகும்.

தற்போது, இப்பாலம் சிதிலமடைந்து வருவதால், அதை பாதுகாக்க வேண்டும் என்று விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்த வகையில் பெரும்பள்ளம் ஓடையில் காலிரங்கராயன் வாய்க்கால் மைல் 13/7 தொட்டி பாலம் சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, பாலத்தின் அருகில் ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பணியினை விரைந்து முடிந்திட அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ,ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை திருமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்கள் உதயகுமார், ஜெகதீஷ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# வேடநத்தம் சிறுமி படுகொலை, குற்றவாளிகள் நிச்சயமாக விரைவில் கைது செய்யப்படுவார்கள்

## தூத்துக்குடியில் கனிமொழி எம்.பி. பேட்டி



தூத்துக்குடி விமான நிலையத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

எரிவாயு உருளை தட்டுப்பாடு குறித்த கேள்விக்கு, எரிவாயு உருளை தட்டுப்பாடு இருப்பதாக ஒரு நிலை உருவாகி இருக்கிறது. முக்கியமாக உணவகங்கள், தங்கும் விடுதிகள் அங்கெல்லாம் தட்டுப்பாடு இருப்பதால் அதை முன்னிட்டு மாணவர்களைவீட்டுக்கு அனுப்பும் சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், வீடுகளுக்கு எந்த தட்டுப்பாடும் இல்லை என ஒன்றிய அமைச்சர் தெரிவித்தாலும் வீடுகளில் பல பேர் இணையதளம்மூலம்பதிவுசெய்ய முயற்சி செய்யும்போது கிடைக்கவில்லை என புகார் இருக்கிறது. இந்த குழப்பங்களையும் பிரச்சினைகளையும் விரைவில் ஒன்றிய அரசாங்கம் தீர்வு காண வேண்டும்.

கப்பல்கள் மூலம் எரிபொருள் வந்து கொண்டிருப்பதாக மத்திய அரசு கூறுகிறது என்ற கேள்விக்கு, அப்படி சொல்லி இருந்தால் உண்மையிலேயே தவறான ஒன்று, அப்படி சொன்னார்களா என தெரியவில்லை. தற்போது நிலவி வரும் போர் சூழலில் மக்களை பாதுகாக்க வேண்டிய கடமை ஒன்றிய அரசாங்கத்திற்கு இருக்கிறது. மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்துஅவர்களைபாதுகாக்க வேண்டிய கடமை ஒன்றிய அரசாங்கத்திற்கு உள்ளது

தேர்தல் அறிக்கை எப்போது வெளியிடுவார்கள் என்ற கேள்விக்கு, தேர்தல் அறிவிப்பே இன்னும் வரவில்லை. வந்த பிறகு அறிவிக்கப்படும்.

விளாத்திகுளம் பள்ளி மாணவி உயிரிழந்தது சம்பந்தமாக கேள்விக்கு, பிரேத பரிசோதனை நடைபெற்று வருகிறது. இதுவரை முழுமையான அறிக்கை வெளியாகவில்லை. நிச்சயமாக இளம் பெண் உயிரை எடுப்பது என்பது கொடுமையான சம்பவம். முதலமைச்சர் விரைந்து குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டும் என கூறி இருக்கிறார்கள். காவல்துறையினர் ஏடிஎஸ்பி, 4 டிஎஸ்பிக்கள், 6 ஆய்வாளர்கள் மற்றும் 10 தனிப்படைகள் அமைத்து பல்வேறு இடங்களில் விசாரணை நடத்தி வருகிறார்கள். குற்றவாளிகள் நிச்சயமாக விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

# வேடநத்தம் சிறுமி படுகொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை பெற்றுத்தர முதல்வர் உறுதியாக நடவடிக்கை எடுப்பார்

## அமைச்சர் கீதா ஜீவன் பேட்டி



விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் பள்ளி மாணவி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில்,உண்மைகுற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்குக் கடுமையான தண்டனை பெற்றுத் தருவதில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதியாக இருப்பதாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் குடும்பத்தினரையும், அங்கு சாலை மறியலில் ஈடுபட்டு வரும் பொதுமக்களையும் அமைச்சர் கீதா ஜீவன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது, அமைச்சர் கீதாஜீவன் பேட்டியில் கூறுகையில்: பள்ளி மாணவி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் குற்றவாளிகளை விரைந்து கண்டறியும் பணியில் காவல்துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு அரசு இயந்திரம் இந்த விஷயத்தில் முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது. மாணவியின் பெற்றோரும், பொதுமக்களும் காவல்துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். உண்மை குற்றவாளிகள் மிக விரைவில் கைது செய்யப்பட்டு,சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்," என்றார்.மேலும்,பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதிலும், அத்தகைய குற்றங்களில் ஈடுபடும் நபர்களுக்குக் கடுமையான தண்டனையைப் பெற்றுத் தருவதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சமரசமற்ற முறையில் உறுதியாக இருக்கிறார் என்றும், இந்த வழக்கில் நீதி நிலைநாட்டப்படும் என்றும் அமைச்சர் கீதா ஜீவன் பொதுமக்களிடம் உறுதி அளித்தார்.

# தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடர்பாக இரண்டு மூன்று நாட்களில் தெரியவரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பேட்டி



விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்," மானாமதுரை ஆகாஷ் காவல்துறை கட்டுப்பாட்டில் இருந்தபோது உயிரிழந்துள்ளார்.நீதிமன்றம் கொலை வழக்காக பதிவு செய்து செய்ய உத்தரவிட்டுள்ளது. ஆகாஷ் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவிப்பதற்காக மதுரை வந்துள்ளேன். தமிழ்நாடு முதல்வர் ஆகாஷ் படுகொலையில் தொடர்புடைய காவல்துறை யாராக இருந்தாலும் சட்டபடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஆகாஷின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.தூத்துக்குடி பள்ளி மாணவி பலாத்காரம் செய்யப்பட வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய வேண்டும்.அரசு உரிய உதவிகளுக்கு மாணவியின் குடும்பத்திற்கு வழங்க வேண்டும். காவல்துறையினர் இன்னும் ஒருவரை கூட கைது செய்யாதது அதிர்ச்சியளிக்கிறது. அவருடைய பெற்றோருடைய குடும்பத்தினரை தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தேன்.பிற்படுத்தப்பட்ட மாணவி நன்றாக தேர்ச்சி பெற்று பல பரிசுகளை வென்றுள்ளார். தூத்துக்குடி பள்ளி மாணவி பலாத்காரம் செய்யப்பட வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய வேண்டும்.அரசு உரிய உதவிகளுக்கு மாணவியின் குடும்பத்திற்கு வழங்க வேண்டும்.காவல்துறையினர் இன்னும் ஒருவரை கூட கைது செய்யாதது அதிர்ச்சியளிக்கிறது.

ஈரான் மீது நடத்தப்படுகின்ற ஏவுகணை தாக்குதல்களால் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு உருவாகியுள்ளது. இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் இதனால் கடும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்போதே பெட்ரோல், டீசல் போன்றவற்றை வாங்கிசேமித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பதட்டம் பொதுமக்கள் இடையே உண்டாகி உள்ளது. அமெரிக்கா,இஸ்ரேல் ஆகிய ஏகாதிபத்திய நாடுகள் ஈரான் மீது நடத்துகின்ற தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். இந்திய அரசு வெளியுறவு கொள்கை ஏகாதிபத்திய ஆதரவு கொள்கையாக இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. இதுவரையில் பிரதமர் வாய் திறந்து இந்த யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கவில்லை பிரதமர் வாய் திறக்க வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும் என்று உரத்து குரல் எழுப்ப வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி மாண்புமிகு பிரதமருக்கு வேண்டுகோள் பிடிக்கிறது.

திமுகதலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை எதிர்ப்பதற்கு வலிமை உள்ள ஒரு கூட்டணி இன்னும் தமிழகத்தில் உருவாகவில்லை.அதிமுக,பாஜக கூட்டணியாக இருந்தாலும் சரி அல்லது நண்பர் விஜய் அவர்களின் தலைமையிலான கட்சியாக இருந்தாலும்சரி ஒருகூட்டணி என்கிற வடிவம் பெறவில்லை. ஆனால் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு எதிரான வதந்திகளை பரப்பிக் கொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டை பொறுத்தவரையில் தமிழ்நாட்டு மக்கள் மதச்சார்பற்றஅரசியல்சக்திகளுக்குதுணை நிற்பார்கள், நல்லாதரவை வழங்குவார்கள். மீண்டும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு மாபெரும் வெற்றி பெற செய்வார்கள்.

*திமுகவால் தான் நடிகர் ரஜினி அரசியலுக்கு வரவில்லை என்ற ஆதவ் அர்ஜுனின் கருத்துக்கு*

அது வெறும் கற்பனை என்றுதான் நான் கருதுகிறேன். நடிகர் ரஜினிகாந்தை பொறுத்தவரையில் அரசியல் அதிகாரம் ஆட்சி போன்றவற்றிற்கு ஆர்வம் காட்டக் கூடியவரும், மயங்கக்கூடியவரும் அல்ல.அவர் அந்த நிலையில் இருந்தெல்லாம் வெளியேறு விட்டார்,விலகி நிற்கிறார். அவரை யாரும் ஆசை காட்டி அரசியலுக்கு இழுக்க முடியாது, அச்சுறுத்தி அவரை வெளியேற்ற முடியாது. ரசிகர்களின் விருப்பத்திற்கு இணங்க அவர் கட்சி தொடங்க விரும்பியது உண்மை, ஆனால் இந்த அரசியலில் வலதுசாரிகளின் சங்பரிவார்கள் தலையீடு அவர்களின் ஆதிக்கம் மேலோங்கி வருகிற சூழலில் அது நமக்கு உகந்ததல்ல என்று தீர்க்கதரிசனமாக உணர்ந்து அதை அவர் கைவிட்டு விட்டார் என்பதுதான் உண்மை. அவரை நான் நேரில் சந்தித்து உரையாடி அதில் இருந்து அவரைப் புரிந்து அதிலிருந்து நான் சொல்லுகிற கருத்து இது. எனவே அவரை திமுக அச்சுறுத்தியது என்பதும் கற்பனை, அதற்காக அவர் அச்சப்பட்டு பின் வாங்கினார் என்பதும் கற்பனை. அது ரஜினி அவர்களின் ஆளுமையே கொச்சைப்படுத்தக்கூடிய ஒரு விமர்சனம்.

தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை குறித்த கேள்விக்கு*

தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடர்பாக இரண்டு மூன்று நாட்களில் தெரியவரும்.

சசிகலா புதிய கட்சி பெயர் அறிவித்தது குறித்த கேள்விக்கு*

சசிகலாவிற்கு அம்மையாருக்கு என்னுடைய வாழ்த்துக்கள், அவர் அரசியல் ரீதியாக என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அதிமுக பிளவு பட்டிருப்பது குறித்த கேள்விக்கு*

திமுகவை அல்லது திமுக தலைமையிலான கூட்டணியை எதிர்க்கக்கூடிய வலிமை பெற்ற ஒரு அணி இன்றும் தமிழகத்தில் உருவாக்கவில்லை. அதிமுகவும்சிதறிகிடக்கிறது அதிமுக கூட்டணி 2021 அமைந்த கூட்டணியும் இன்னும் முழுமையாக ஒன்றுசேரவில்லை.அதை ஒரு வடிவத்திற்கு கொண்டு வருவதற்கே இன்னும் அவர்கள் போராடிக் கொண்டுள்ளார்கள்.

ஆகவே அதிமுக பாஜக கூட்டணியை 2021 இல் இருந்தவாரே அது முழுமை பெறவில்லை. அதிலும் அந்த கூட்டணி இருந்த தேமுதிக இப்போது திமுக கூட்டணிக்கு வந்துவிட்டது எனவே திமுக தலைமையிலான கூட்டணியை எதிர்க்கிற வலிமை பெற்ற ஒரு மாற்றுக் கூட்டணி அல்லது எதிர் கூட்டணி தமிழகத்தில் உருவாகவில்லை என்பதுதான் எதார்த்தமான உண்மை" என்றார்.



கன்னியாகுமரி அருமனை சந்திப்பில் சீரமைத்து சில நாட்களிலேயே உடைந்து விழுந்த பயணிகள் நிழலகம், தரமற்ற பணிகளால் பொதுமக்களின் உயிருக்கே ஆபத்து. நடவடிக்கை எடுக்க சமுக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இறச்சகுளம் பகுதியில் பள்ளி,கல்லூரி மாணவர்களுக்குகஞ்சாவிற்பனைசெய்தஅண்ணன்,தம்பி கைதுஅவர்களிடம் இருந்து 1 கிலோ 250 கிராம் கஞ்சா பறிமுதல்மேலும் பூதப்பாண்டி போலீசார் கைது செய்த இறச்சகுளம் விஷ்ணுபுரம் காலனியை சேர்ந்த விக்னேஷ் (வயது 24), அவரது தம்பி தமிழரசு (22) ஆகிய சகோதரர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.